**மாண்புமிகு சார்பு நீதிமன்றம், மானாமதுரை**

**O.S. No. 126/2022**

**2023ம் ஆண்டு நவம்பர் மாதம் 2-ஆம் தேதி வியாழக்கிழமை**

**வா.சா.1 (விக்னேஸ்வரன்)**

**வா.சா.1 மீண்டும்ஆஜராகி அவர் தரப்பில் கீழ்கண்ட ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டன.**

**மு.வி (தொடர்ச்சி)**

தாவா 2, 3 லக்க சொத்துக்கள் அதன் ஆதி பாத்தியஸ்தர் பெயருக்குண்டான பட்டா புத்தகம் **வா.சா.ஆ.1** ஆகவும் கடந்த 21.03.2005ல் தாவா 1வது லக்க சொத்தை 1ம் பிரதிவாதி 4ம் பிரதிவாதி பெயருக்கு எழுதிய பத்திரம் நகல் **வா.சா.ஆ.2** ஆகவும் கடந்த 15.02.2005 தேதிய தாவா 2, 3 லக்க சொத்துக்களை 2ம் பிரதிவாதி 3ம் பிரதிவாதிக்கு எழுதியுள்ள பத்திரம் நகல் **வா.சா.ஆ.3** ஆகவும் கடந்த 18.11.2021ல் வாதிகள் 1 முதல் 4 பிரதிவாதிகளுக்கு அனுப்பிய வழக்குரைஞர் அறிவிப்பு நகல் **வா.சா.ஆ.4** ஆகவும் மேற்படி அறிவிப்பினை 1 முதல் 4 பிரதிவாதிகள் பெற்றுக்கொண்டதற்கான ஒப்புதல் அட்டைகள் **வா.சா.ஆ.5** ஆகவும் பட்டா மாறுதலை ரத்து செய்ய 1ம் வாதி சிவகங்கை வருவாய் கோட்டாட்சியர் கொடுத்த மனு நகல் **வா.சா.ஆ.6** ஆகவும் குறியீடு செய்யப்படுகின்றது. பிராதுப்படி தீர்ப்பளிக்க வேண்டுகிறேன்.

**பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் அவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

**சாட்சி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சியம் சொல்ல என்னால் கேட்கப்பட்டு தட்டச்சருக்கு கூறி அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது**

**சார்பு நீதிபதி**
**மானாமதுரை**